விஜயபாரதம்
24.08.2020 மலர் - 1, இதழ் - 141 VIJAYABHARATHAM DAILY
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று)

# வணக்கம்

## கோயில் நிதி 10 கோடி லபக்



மும்பையில் உள்ள சித்தி விநாயகர் பிரபலமானது. இந்த கோயிலில் உள்ள விநாயகர் மற்ற கோயில்களில் உள்ள விநாயகரைப் போல இல்லாமல் இடது பக்கம் தும்பிக்கைக்குப் பதிலாக வலது பக்கமாக தும்பிக்கை அமைந்துள்ளது. தினசரி ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து தரிசித்து செல்கிறார்கள். கோயில் உண்டியல் கோடிகளில் குவிகிறது.

இந்த கோயிலுக்கான நிர்வாகிகளை அரசே நியமிக்கிறது. அதனால் அவர்கள் அரசின் கைப்பாவைகளாகவே நடந்து கொள்கிறார்கள்.

கோயில் நிதியிலிருந்து பத்து கோடி ரூபாயை கொரோனா நிவாரண நிதிக்காக மகாராஷ்டிரா அரசு எடுத்துள்ளது. பக்தர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். நீதிமன்றத்தில் அரசின் செயல்பாட்டை எதிர்த்து வழக்கும் நடைபெற்று வருகிறது.

மதச்சார்பற்ற அரசு என்று சொல்லிக்கொள்ளும் அரசு மசூதி, சர்ச் சொத்துக்களில் கைவைக்க இயலாத அரசு ஹிந்து கோயில்களில் நிதியில் மட்டும் கைவைப்பது எந்த வகையில் நியாயம்?

கோயில் நிதி ஹிந்துக்களிடையே பக்தியை வளர்க்கவும், ஹிந்து மதத்தை வளர்க்கவும், பரப்பவும் பயன்படுத்த வேண்டும்.

சிவசேனா ஹிந்துத்துவம் சொல்லி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று எப்போதும் விரோதமாக செயல்பட்டு வரும் காங்கிரசுடனும், தேசியவாத காங்கிரசுடனும் ஆட்சி அமைத்திருப்பது ஹிந்துக்களுக்கு இழைத்த துரோகமாகும்.

பிள்ளையார் மீது கைவைத்தவர்கள் யாரும் உருப்படப்போவதில்லை. சிவசேனா ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன.

# பரதன் பதில்

*ரஷ்யா எதிர்கட்சி தலைவர் அலெக்சி நவல்னிக்கு உணவில் விஷமா?*

**மெயிலில் கு. மனோஜ்குமார், கட்டிபாளையம்**

இதுதான் கம்யூனிஸம், ரஷ்ய அதிபர் விலாடிமிர் புதின் 2036 வரை அவரே அதிபர். பொது வாக்கெடுப்பு என்ற பொய்யான நடவடிக்கையால் அதிபராக தொடருகிறார். இங்குள்ள கம்யூனிஸ்டுகள் இதுபற்றி மூச்.

## மிரட்டலுக்கு அடிபணிவதா?

புளூம்ஸ்பரி எனும் பதிப்பகம் தான் வெளியிட்டிருந்த டெல்லி ரியாட்ஸ் 2020 தி அன் டோல்ட் ஸ்டோரி (டெல்லி கலவரம் 2020 சொல்லப்படாத கதை) எனும் தன் புத்தகத்தை திடீரென திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது. அர்பன் நக்ஸல்கள் மற்றும் ஜிஹாதிகளின் மிரட்டல் காரணமாகவே பதிப்பகம் இவ்வாறு செய்வதாக இந்த புத்தகத்தின் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளார். பதிப்பகம் இந்த முடிவை கைவிட வேண்டும் என ஆனந்த் ரங்கநாதன், சந்தீப் தியோ, சஞ்சய் தீட்சித் ஆகிய எழுத்தாளர்களும் குரல் கொடுத்துள்ளனர்.

*தன்னைப்பற்றி உண்மை வெளிவராமல் இருக்க எந்த எல்லைக்கும் செல்வார்கள் போல!*

## உண்மைதானா?

தினசரி கொரோனா நோயாளிகளுக்கான உணவிற்கென ரூபாய் 25 கோடி செலவு செய்யப்படுவதாக முதலமைச்சர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார். சுமார் 54000 நோயாளிகள் மட்டுமே தற்போது மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி பார்த்தால் ஒருவருடைய தினசரி உணவுக்கான செலவு ரூபாய் 4600க்கு மேல் கணக்கு வருகிறது.

*இதில் எது உண்மை?*

# பாதுகாப்பில் அலட்சியமா?



ஒருமுறை இசைஞானி இளையராஜா பெங்களூர் – சென்னை விமானத்தில் பயணம் செய்தார். பெங்களூர் விமான நிலையத்தில் அவரது பையில் தேங்காய், பழம், எழுமிச்சை என மங்களூர் கோயில் பூஜை பொருட்கள் இருந்தன. சந்தேகமடைந்த அதிகாரிகள் அவரை பரிசோதனை செய்தனர். இதனால் சிறிது நேரம் தாமதிக்கப்பட்டார்.

இந்த செய்தி வெளியானவுடனே ஸ்டாலின் வகையறாக்கள் தமிழனுக்கு அவமானம் என்று கண்டனம் தெரிவித்தனர். இதையெல்லாம் பார்த்த இளையராஜா அவர்கள் தங்கள் கடமைகளைத்தானே செய்தனர் என்று கூறி பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

# கோடி கொடுத்துப் புண்ணியம் தேடிய தாய்

கேரளா சேவாபாரதி அமைப்புக்கு லீலா அந்தர்ஜனம் என்ற அம்மையார் தன் சொந்த நிலத்தை காணிக்கையாக வழங்கியுள்ளார். நிலத்தின் மதிப்பு 3.5 கோடி ரூபாய். தற்போது அங்கு சுகர்ம விகாச கேந்திரம் (நற்பணி வளர்ச்சி மையம்) உருவாகி வருகிறது நவம்பரில் அதன் திறப்பு விழா நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# கடமையை செய் பலனை எதிர்பாராதே!



கீதையின் சாரம்பற்றி காந்தியிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்காக அவருடைய ஆஸ்ரமத்திற்கு ஒரு நண்பர் வந்தார். தனது கருத்தை காந்திஜியிடம் கூறினார்.

காந்திஜியோ அவரை நோக்கி ''இதோ இங்கே வந்து இருக்கின்ற செங்கற்களை எண்ணி வையுங்கள்'' என்றார். நண்பரும் அப்படியே செய்யலானார்.

சில நாட்கள் சென்றன. நண்பருக்கு சலிப்பு ஏற்பட்டது. உடனிருந்தவரிடம் அலுத்துக்கொண்டார். ''கற்களை எண்ணுவதற்கா இங்கு வந்தேன்? கீதை கற்க அல்லவா வந்தேன்?'' என்று கூறினார். அவர் இவ்வாறு கூறியது காந்திஜியின் காதில் விழுந்தது.

உடனே அவர் நண்பரை அழைத்து ''கீதையின் சாரத்தை இன்னும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா? தன்னலம் கருதாமல் ஒரு வேலையில் ஈடுபடுவதுதான் கீதையின் கருத்து'' என்று கூறினார்.




''கடமையை செய் பலனை எதிர்பாராதே!'' என்னும் கீதையின் கருத்தை எவ்வளவு நேர்த்தியாக உணர்த்தி விட்டார் காந்திஜி என்று வியந்தார் நண்பர்.